# பொய்யான குற்றச்சாட்டுக்கு

# 48 மணி நேரத்தில் மன்னிப்பு கோராவிடில் ரூ.50 கோடி இழப்பீடு - வழக்கு!

## பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு - கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் நோட்டீசு - முழு விவரம்!

**சென்னை, ஏப்.22-**

**தமிழ்நாடு பா.ஜ.க. மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை தேவையற்ற பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி உள்ளார். அதற்காக 48 மணி நேரத்திற்குள் அவர் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.இல்லாவிடில் அவரிடம் ரூ.50 கோடி இழப்பீடு கேட்கப்படும் என்றும் வழக்கு தொடரப்படும் என்றும், கழக இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. நோட்டீசு அனுப்பியுள்ளார்.**

**அந்த நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-**





திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரான எங்கள் கட்சிக்காரர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அண்ணா அறிவாலயம், எண் : 367 & 369, அண்ணா சாலை, சென்னை 600018 என்ற முகவரியில் செயல்பட்டு வருகிறார். அவரது அறிவுறுத்தலின்படி, கே. அண்ணாமலை, த/பெ. குப்புசாமி, கமலாலயம், வைத்யராமன் தெரு, பார்த்தசாரதிபுரம்,தி.நகர், சென்னை 600017 என்பவர் மீது நாங்கள் வெளியிடும் சட்டப்பூர்வ அறிவிப்பு பின்வருமாறு :

1. தற்போது எங்கள் கட்சிக்காரர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராகவும், 2021ஆம் ஆண்டு நடந்த சட்டப்பேரவை தேர்தலில் சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு, சிறப்புத் திட்ட அமலாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு மற்றும் ஊரகக் கடன் திட்டம் ஆகிய துறைகளுக்கான அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

2. சென்னையில் உள்ள புகழ்பெற்ற லயோலா கல்லூரியில் B.Com பட்டம் பெற்றவர் என்றும், அரசியலுக்கு வருவதற்கு முன்னர் ஒரு வெற்றிகரமான நடிகராகவும், "M/s Red Giant Movies" என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலம் மாபெரும் வெற்றித் திரைப்படங்களை தயாரித்து, வெளியிட்ட தயாரிப்பாளராகவும் மக்கள் மனதில் இடம் பெற்றதாக எங்கள் கட்சிக்காரர் தெரிவித்துள்ளார். மேற்கூறிய திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் அவரது கடின உழைப்பு, திறமை மற்றும் அந்த தொழிலுக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் பல பிரமாண்டமான வெற்றிப்படங்களை தயாரித்து வெளியிட்டதால், தமிழ்நாட்டின் முன்னணி திரைப்பட தயாரிப்பு மற்றும் விநியோக நிறுவனங்களில் ஒன்றாக பெயர் பெற்றுள்ளது. இந்த நிலையில், தனது கழகப் பணிகள் மற்றும் மக்கள் தொண்டு ஆகியவற்றில் தனது கடமையை ஆற்ற வேண்டும் என்ற நோக்கில் எனது கட்சிக்காரர் தனது M/s Red Giant Movies திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்திலிருந்து விலகிவிட்டதாகவும் தெரிவிக்கிறார்.

3. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டப்பேரவை உறுப்பினராகவும், அமைச்சராகவும் அவர் ஆற்றிய பணிகள் தேசிய அளவில் பரவலான பாராட்டுகளைப் பெற்றுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. அவருக்கு வாக்களித்த பொதுமக்களின் நலனுக்காக இரவு பகலாக உழைத்து வருவதால் பொது மக்கள் மத்தியில் ஒரு நட்சத்திர அந்தஸ்து கொண்ட நற்பெயரை எங்கள் கட்சிக்காரர் பெற்றிருக்கிறார்.

4. ஏப்ரல் 14, 2023 அன்று, நீங்கள் சென்னையில் உள்ள பா.ஜ.க. மாநிலத் தலைமையகமான கமலாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்ததாகவும், அந்த சந்திப்பு உங்கள் முகநூல் பக்கத்தில் (https://www.facebook.com/watch/live/?extid=CL-UNK-UNK-k.annamalai.ips/) நேரடியாக ஒளிபரப்பப்பட்டது என்று எங்கள் கட்சிக்காரர் தெரிவிக்கிறார். இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியின்படி, பதிவு செய்யப்பட்ட அந்த வீடியோவுக்கான இணைய தள இணைப்பு

**வீடியோவின் இணையதள இணைப்பு**

https://www.facebook.com/watch/live/?extid=CL-UNK-UNK-UNK-IOSGKOT-GK1C&mibextid=u9e0cZ&ref= watch permalink&v=6340060979378386 (இதற்குப் பிறகு இது 'வீடியோ' என்று குறிப்பிடப்படும்). அந்த செய்தியாளர் சந்திப்பு தொலைக்காட்சி மற்றும் யூ.டியூப் சேனல்களிலும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இப்போது அது பல யூ.டியூப் சேனல்கள் மற்றும் பல்வேறு சமூக ஊடக பக்கங்களிலும் காணப்படுகிறது. அந்த செய்தியாளர் சந்திப்பின் மொத்த கால அளவு 1 மணி 07 நிமிடங்கள் 21 வினாடிகள் ஆகும். தவிர, நீங்கள் https://enmannenmakkal.com/ என்ற URL இணைய இணைப்பு மூலம் ஒரு வலைப்பக்கத்தை உருவாக்கி, அதன் மேற்சொன்ன வீடியோவை 'என் மண் என் மக்கள்' என்ற ஹேஷ்டேக்குடன் சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளீர்கள். மேற்கூறிய உங்கள் செய்தியாளர் சந்திப்பின் முழு அவதூறான வீடியோவின் நகலை இந்த சட்டப்பூர்வ அறிவிப்புடன் பென் டிரைவ் மூலம் இணைத்து வழங்கப்பட்டுள்ளது. அதை இந்த அறிவிப்பின் ஒரு பகுதியாக படிக்கப்படலாம்.

5. நீங்கள் வெளியிட்ட 'DMK Files' என்று தலைப்பிடப்பட்ட வீடியோ தொகுப்பின் ஒரு பகுதியாக உள்ள அந்த வீடியோ காட்சியின் 26.37 நிமிடத்தில், எங்கள் கட்சிக்காரரின் புகைப்படம் மற்றும் பெயர் ஆகியவற்றைக் காட்டப்பட்டு அவருக்கு ரூ.2,039 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் இருப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள். அந்த வீடியோ காட்சியின் அடுத்த கட்டத்தில் எங்கள் கட்சிக்காரரின் வம்சாவளியாக அவரது தந்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாட்டு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களிடமிருந்து தொடங்கியதாக காட்டப்படுகிறது. ஆனால் அதில் எவ்வித முகாந்திரமும் இல்லாமல், எங்கள் கட்சிக்காரரின் இரு குழந்தைகளின் (ஒரு மைனர் மகள் உட்பட) பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

### தனிப்பட்ட வாழ்வு மீதான உரிமை மீறல்

மேலும், எங்கள் கட்சிக்காரரின் குழந்தைகள் தி.மு.கழகத்தின் உறுப்பினர்களாகவோ அல்லது கழகப்பொறுப்பு வகிப்பவர்களாகவோ இல்லாத நிலையிலும், அவர்கள் பொது வாழ்வில் ஈடுபடாத நிலையிலும், வீடியோவில் அவர்களுடைய பெயர்களை சேர்த்திருப்பது எங்கள் கட்சிக்காரரின் தனிப்பட்ட வாழ்வு மீதான உரிமை மீறலாகவும், அவரது குழந்தைகளின் தனிப்பட்ட வாழ்வு மீதான உரிமை மீறலாகவும் இருப்பதால் உங்கள் மீது வழக்கு தொடுக்கப்படும். அரசியல் ஆதாயத்திற்காக கூறப்பட்ட உங்கள் வீடியோ தொகுப்பில் தனது மைனர் மகளின் பெயரைச் சேர்த்துள்ளது, ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் தொடர்பான சட்ட தீர்மானங்கள் பிரிவு 8, 16 மற்றும் 37இன் கீழ் இயற்றப்பட்டு, 11.12.1992 அன்று இந்தியாவால் அங்கீகரிக்கப்பட்டு, அதன் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்ட எங்கள் கட்சிக்காரரின் மைனர் மகளின் தனியுரிமையை நீங்கள் மீறியுள்ளதால், 2005ம் ஆண்டில் அமைக்கப்பட்ட குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மூலம் சட்டப்படி வழக்குத் தொடுப்பதாக தெரிவிக்கிறார்.

### வெற்றுப் பொய்

6. வீடியோ படக்காட்சியில் காட்டப்பட்ட www.myneta.info என்ற இணையதளத்தில் காட்டப்பட்ட ஒரு படக்காட்சியில், எங்கள் கட்சிக்காரரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்து, தேர்தல் வேட்புமனுப் படிவத்துடன் எங்கள் கட்சிக்காரர் தாக்கல் செய்த படிவம்26 பிரமாணப் பத்திரத்தில் அவர் தெரிவித்த விபரங்கள் காட்டப்படுகிறது. அந்தப் படக்காட்சியில் எங்கள் கட்சிக்காரர் தனது சொத்து மதிப்பு ரூ. 29 கோடி என்று அறிவித்துள்ளார். அந்த வீடியோவின் அடுத்த காட்சியில், Red Giant movies திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் மதிப்பு ரூ.2,010 கோடி என்று காட்டப்படுகிறது. அதன் அடிப்படையில் எங்கள் வாடிக்கையாளரின் தற்போதைய சொத்து மதிப்பு ரூ.2,039 கோடி என்று நீங்கள் தெரிவிக்கிறீர்கள். எங்கள் கட்சிக்காரர் முன்னதாகவே தனது சொத்து மதிப்பு குறித்த விபரங்களை 2021 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடும்போது, பொதுத்தளத்தில் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கிறார். அதன் அடிப்படையில் தனக்கு ரூ. 2,039 கோடி மதிப்பிலான சொத்துக்கள் இருப்பதாக கூறப்பட்ட குற்றச்சாட்டு ஆதாரம் இல்லாமல், வெற்றுப் பொய்யாக, இட்டுக்கட்டப்பட்டு எங்கள் கட்சிக்காரரின்

### இழிவுபடுத்தும் நோக்கம்

7. எங்கள் கட்சிக்காரர் முதலாவதாக குறிப்பிடுவது என்னவென்றால், 'Red Giant movies' என்ற பங்குதாரர் நிறுவனத்திலிருந்து ராஜினாமா செய்து விட்ட நிலையில், அந்த நிறுவனத்தின் சொத்துக்களை அவரது சொத்துக்கள் என்று காட்டப்பட்டது, தவறான, ஆதாரமற்ற, அவதூறு மட்டுமல்லாமல், எங்கள் கட்சிக்காரரது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் திட்டமிட்ட செயல் என்றும் கூறுகிறார். இரண்டாவதாக, M/s Red Giant Movies நிறுவனத்தின் மதிப்பு என்பது ரூ. 2,010 கோடி என்று மிகையான கற்பனைத் திறத்துடன் உயர்த்தி தெரிவிக்கப்பட்ட அளவுக்கு இல்லை என்று எங்கள் கட்சிக்காரர் கூறுகிறார். எங்கள் கட்சிக்காரர் அந்த நிறுவனத்தில் பங்குதாரராக இருந்தபோது, நிறுவனத்தின் மதிப்பு சுமார் ரூ.30 கோடி ஆகும். எனவே, எங்கள் கட்சிக்காரரை இழிவுபடுத்தும் நோக்கத்துடனும், அவரது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடனும், நீங்கள் கற்பனையான ரூ.2,010 சொத்து மதிப்பு என்ற இல்லாத ஒன்றை கண்டுபிடித்து உருவாக்கியுள்ளீர்கள். ஒரு திரைப்பட தயாரிப்பு நிறுவனம் என்ற வகையில் M/s Red Giant movies என்ற நிறுவனத்துக்கென்று சில குறிப்பிட்ட சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால், நீங்கள் கற்பனையாக மிகைப்படுத்தி, கூறப்பட்ட அளவுக்கு இல்லை என்பதுடன், அந்த சொத்துக்கள் எவ்விதத்திலும் சட்ட விரோதமான முறையில் பெறப்பட்டவை அல்ல என்றும் எங்கள் கட்சிக்காரர் கூறுகிறார்.

### கட்சிக்காரரின் கடின உழைப்பு!

8. M/s Red Giant movies நிறுவனம் தயாரித்த திரைப்படங்கள் வர்த்தக ரீதியாக வெற்றி பெறாத நிலையில், அந்த நிறுவனத்தில் சந்தேகத்திற்குரிய வகையில் நிதி முதலீடுகள் செய்யப்பட்டதாக "DMK files" (வீடியோ நேரம் 34:20 தொடங்கியதிலிருந்து) வீடியோ தொகுப்பில் உள்ள உங்கள் உரையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை எங்கள் கட்சிக்காரர் திட்டவட்டமாக மறுக்கிறார். அவர் அந்த நிறுவனத்தின் பங்குதாரராக இருந்தபோது, நிறுவனம் பல லாபகரமான திரைப்படங்களை தயாரித்து விநியோகம் செய்துள்ளது. M/s Red Giant movies நிறுவனம் கடந்த 16 ஆண்டுகளாக செயல்பட்டு வருவதாகவும், நிறுவனத்தின் நற்பெயரும், மதிப்பும் எங்கள் கட்சிக்காரரின் கடின உழைப்பு மற்றும் வர்த்தக திறமை ஆகியவற்றின் அடிப்படையில் படிப்படியாக கட்டமைக்கப்பட்டது. மேலும், எங்கள் கட்சிக்காரர் பங்குதாரராக இருந்த காலத்தில் அந்த நிறுவனம் வர்த்தக ரீதியாக நல்ல வளர்ச்சியை பெற்றிருந்தது. அதற்கு மாறாக நீங்கள் தெரிவித்தவாறு, 2008 -2011 ஆகிய காலகட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் அ.தி.மு.க ஆட்சியில் இருந்த 2011 மற்றும் 2021 ஆகிய காலகட்டங்களிலும் எங்கள் கட்சிக்காரரின் கடின உழைப்பு காரணமாக நிறுவனம் வர்த்தக ரீதியாக லாபகரமாக செயல்பட்டு வந்துள்ளது. எங்கள் கட்சிக்காரர் பங்குதாரராக இருந்தபோது ஒவ்வொரு நிதியாண்டிலும், வருமான வரித்துறையில் தாக்கல் செய்யப்பட்ட நிறுவனத்தின் வரவு செலவு கணக்கு விபரங்கள் மூலமாக அந்த நிறுவனம் பெற்ற முதலீடுகள் மற்றும் லாபம் ஆகிய விபரங்களை அறிந்து கொள்ளலாம். அந்த நிறுவனத்தில் பங்குதாரராக எங்கள் கட்சிக்காரர் இருந்த சமயத்தில் சட்டத்திற்கு புறம்பான நிதி முதலீடுகள் நிறுவனத்தில் செய்யப்பட்டது என்ற உங்கள் பொய்யான கருத்துக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பதுடன், அது எங்கள் கட்சிக்காரரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் உள் நோக்கத்துடன் தெரிவிக்கப்பட்ட அவதூறான குற்றச்சாட்டாகும்.

9. நீங்கள் குற்றம் சாட்டியது போல, எங்கள் கட்சிக்காரர் 'Noble Steel' என்ற நிறுவனத்தின் இயக்குநராக எந்த ஒரு காலகட்டத்திலும் இருந்ததில்லை. மேலும், வீடியோவில் உள்ள ஒரு படக்காட்சியில், ஒரு நிறுவனத்தின் பதிவு சான்றிதழ் காட்டப்படுகிறது. அதில் எங்கள் கட்சிக்காரர் "Noble Promoters Pvt. Ltd" என்ற நிறுவனத்தின் இயக்குநர் என்பதாக காட்டப்படுகிறது. ஆனால், 2010ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே எங்கள் கட்சிக்காரர் அந்த நிறுவனத்தில் இருந்து வெளியேறி விட்டார். உங்களது செய்தியாளர் சந்திப்பில், ஏதோ சந்தேகத்துக்கிடமான சில காகிதங்களைக் காட்டி அதில் எங்கள் கட்சிக்காரர் "Noble Promoters Pvt. Ltd" என்ற நிறுவனத்தின் இயக்குநராக உள்ளதாக தெரிவிப்பதும் சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது. அதாவது, "Noble Promoters Pvt. Ltd" நிறுவனத்தில் இயக்குனராக எங்கள் கட்சிக்காரரை நீங்கள் குறிப்பிடும் அதே சமயத்தில், 'Noble Steels' நிறுவனத்தின் இயக்குனராகவும் அவர் குறிப்பிடப்படுவது குறித்து எங்கள் கட்சிக்காரரே ஆச்சரியம் அடைந்துள்ளார். நீங்கள் ஒரு முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி என்று நீங்களே தெரிவித்துள்ளபடி, இந்த இரண்டு நிறுவனங்களின் பெயர்களை வேறுபடுத்திப் பார்க்க முடியாமல் போனதற்கு அறியாமை என்பதை ஒரு காரணமாகக் கூற முடியாது என்று எங்கள் கட்சிக்காரர் கூறுகிறார். அந்த வகையில், எங்கள் கட்சிக்காரர் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றே, திட்டமிட்டு தவறான அறிக்கையை நீங்கள் அளித்துள்ளீர்கள் என்று எங்கள் கட்சிக்காரர் கூறுகிறார்.

10. பண மோசடி என்ற பிசுபிசுத்த பொய்க் குற்றச்சாட்டை நீங்கள் சுமத்தும் முன்னர் பண மோசடி என்றால் என்ன என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எங்கள் கட்சிக்காரர் தெரிவிக்கிறார். பணமோசடி தடுப்புச் சட்டம், 2002 இன் கீழ் பணமோசடி என்றால் சட்டத்துக்கு புறம்பான வகையில் சேர்க்கப்பட்ட பணத்தை சட்டத்துக்கு உட்பட்டதாக மாற்ற மேற்கொள்ளும் நடவடிக்கை ஆகும். அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சரின் துபாய் பயணத்தின் போது மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட Noble Steels Dubai நிறுவனத்தில் எங்கள் கட்சிக்காரர் ஒரு பங்குதாரராகவோ, இயக்குநராகவோ அல்லது எந்தவொரு வகையிலும் தொடர்பு கொண்டவர் அல்ல என்ற நிலையில், அவர் மீது பணமோசடி குற்றச்சாட்டு எதுவும் இருக்க முடியாது. எனவே, உங்கள் அறிக்கைகள் அவதூறானவை.

11.மேற்கூறப்பட்ட உண்மைகள் அனைத்தும் உங்கள் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை, அர்த்தமோ, உறுதியான ஆதாரங்களோ இல்லாதவை, சரி பார்க்கப்படாதவை என்பதுடன் பொறுப்பற்று அலட்சியமாக சொல்லப்பட்டவை என்பதையும் காட்டுகின்றன. அத்துடன், எங்கள் கட்சிக்காரருக்கு அவப்பெயரை ஏற்படுத்தவும், பொதுமக்கள் மத்தியில் அவருக்கு உள்ள நற்பெயரை கெடுக்கவும் மட்டுமே இப்படிப்பட்ட அறிக்கைகள் உருவாக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

12.எங்கள் கட்சிக்காரரை விமர்சிப்பதற்கான உங்கள் உரிமையானது இந்திய அரசியலமைப்பு சட்ட விதிகள் 19(1)(a) இன் கீழ் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றில் பெற்ற உரிமை என்று இருப்பினும், அந்த உரிமையானது 19(2) ஆகிய விதிகளின் கீழ் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும். ஒருவர் மீது அவதூறு தெரிவிப்பது என்பது பேச்சு சுதந்திரத்திற்கு உட்பட்டதல்ல. பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒரு தனிநபரின் மதிப்பு அல்லது நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அவருக்கு எதிராக அவதூறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் போது, அவை உறுதி செய்யப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று நீதிமன்றங்கள் கூறுகின்றன. அந்த வகையில் எங்கள் கட்சிக்காரரின் நற்பெயரையும், மதிப்பையும் கெடுக்கும் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை முன் வைப்பதற்கு சட்டப்பூர்வ அடிப்படை அல்லது உறுதியான ஆதாரங்களை வைத்திருக்க வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளது. இந்த நிலையில், உங்கள் குற்றச்சாட்டுகளுக்கு நீங்கள் எவ்வித அடிப்படை சான்றுகளையும் அளிக்கவில்லை, எனவே, சரிபார்க்கப்படும் சட்ட வரம்புகளை நீங்கள் பூர்த்தி செய்யவில்லை. மேலும் நீங்கள் அவதூறான குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளீர்கள். அவ்வகையில் உங்கள் அவதூறுகள் உண்மையிலிருந்து வெகு தொலைவில் உள்ளன. அதற்கு நீங்கள்தான் பொறுப்பு என்ற வகையில் உங்கள் மீது சட்டப்படி வழக்கு தொடரப்படும். எனவே எங்கள் கட்சிக்காரரின் நற்பெயர், மதிப்பு மற்றும் மரியாதை ஆகியவற்றின் மீது களங்கம் சுமத்திய நீங்கள் இழப்பீடு செலுத்த வேண்டும்.

13. கடந்த 14.04.2023 அன்றைய செய்தியாளர் சந்திப்பில் உங்களால் ஒளி பரப்பப்பட்ட அவதூறான குற்றச்சாட்டுக்களுக்கு பிறகு, எனது கட்சிக்காரரின் நண்பர்கள், சகாக்கள், கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அவரைத் தொடர்ந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உங்களால் தெரிவிக்கப்பட்ட பொயக் குற்றச்சாட்டுகள் குறித்து அவரிடம் விசாரிப்பதாக எங்கள் கட்சிக்காரர் கூறுகிறார். அதனால், அவரது மரியாதை மற்றும் நற்பெயருக்கு களங்கமும், பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

14. எனவே, எங்கள் கட்சிக்காரர் உங்களிடம் தெரிவித்துக்கொள்வதாவது :

அ. கடந்த ஏப்ரல் 14, 2023 அன்று செய்தியாளர் சந்திப்பில் "DMK FILES" என்ற வீடியோ தொகுப்பு மூலம் வெளியிடப்பட்ட உங்கள் பேச்சு மற்றும் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றுக்கு நிபந்தனையற்ற, பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். அவ்வாறு கேட்கப்பட்ட மன்னிப்பை அனைத்து தேசிய ஆங்கில நாளிதழ்கள் மற்றும் பிராந்திய தமிழ் செய்தித்தாள்கள், தேசிய மற்றும் பிராந்திய தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் உங்கள் சமூக ஊடகப் பக்கங்களில் வெளியிட வேண்டும்.

ஆ. உங்களது சமூக ஊடக வலைதளங்களான உங்கள் முகநூல் பக்கம் (https://www.facebook.com/watch/k.annamalai.ips/) மற்றும் இணையதளமான https://enmannenmakkal.com/: ஆகியவற்றில் உள்ள செய்தியாளர் சந்திப்பின் போது வெளியிடப்பட்ட அவதூறு தெரிவிக்கும் வீடியோவை உடனடியாக நீக்க வேண்டும்.

இ. மேலே உள்ள பத்து 4இல் உள்ள வீடியோவில் எங்கள் கட்சிக்காரர் மனம் புண்படும் வகையில் அவருக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பேசுதல்,

ஒளிபரப்புதல், வெளியிடுதல், பகிர்தல், பதிவேற்றம் செய்தல், பரப்புதல் அல்லது எந்த வகையிலும் அவற்றின் மூலம் பொதுமக்களுடன் தொடர்புகொள்வதை நிறுத்த வேண்டும்.

ஈ. எங்கள் வாடிக்கையாளருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,00,00,000 (ரூபாய் ஐம்பது கோடிகள் மட்டும்) செலுத்த வேண்டும். அதை அவர் தமிழ்நாடு முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு அளிக்க விழைகிறார்.

இந்த அறிவிப்பு கிடைத்த 48 மணி நேரத்திற்குள், மேற்கண்ட இழப்பீட்டை எங்கள் கட்சிக்காரருக்கு அளிக்க தவறும் பட்சத்தில், உங்களுக்கும், உங்கள் சொத்துக்களுக்கு எதிராகவும் தகுந்த சிவில் மற்றும் கிரிமினல் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அதனால் ஏற்படும் அனைத்து விளைவுகள் மற்றும் செலவுகளுக்கு நீங்களே தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் என்று இதன் மூலம் அறியவும்.

இவ்வாறு அந்த நோட்டீசில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்துள்ளார்.